சாதாரணக்கூட்டம்

வெள்ளகோவில் நகராட்சியின் சிறப்புக்கூட்டம் 2022-ம் ஆண்டு சுபகிருது வருடம் ஜுன் மாதம் **29.06.2022–ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு** நகர்மன்றத் தலைவர் தலைமையில் நடைபெற்று கீழ்காணும் பொருள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானம் : 95 / 2022

ஆணையர் அவர்களின் மே 2022–ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 1117 / 2022 / சி1)

தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது

தீர்மானம் : 96 / 2022

நகராட்சி பொறியாளர் அவர்களின் மே 2022–ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 1117 / 2022 / சி1)

தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது

தீர்மானம் : 97 / 2022

சட்டப்பேரவை அறிவிப்புகள் 2022-23, வெள்ளகோவில் நகராட்சியில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் கீழ்காணும் பணிக்கு 06.05.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

வேலையின் பெயர்	மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்)
வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு மற்றும் திட்ட அறிக்கை சமர்பிக்க திட்ட ஆலோசகர் நியமனம் செய்தல்.	39.95

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்தப்புள்ளி சதவீதம்
1)	ECI Infra Solution (P) Ltd., ஒப்பந்ததாரர்	மதிப்பீட்டில் 1.00 %
2)	SSG Engineering, ஒப்பந்ததாரர்,	மதிப்பீட்டில் 1.25 %

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ECI Infra Solution (p) Ltd., **ஒப்பந்ததாரர்,** மதிப்பீட்டில் **1.00%** விலை விகிதத்தில் கொடுத்துள்ளதை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 1316 / 2022 / இ1)

தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது

தீர்மானம் : 98 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புறம்) 2.0–ன் கீழ் கீழ்காணும் இடங்களில் சமுதாயக் கழிப்பிடம் மற்றும் பொதுக் கழிப்பிடம் கட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 5990 / 2022 / SBM, நாள். 11.04.2022–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்.	வேலையின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்)
1	வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட அகலரைப்பாளையம்புதூர் பகுதியில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல்	24.96
2	வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட செம்மாண்டம்பாளையம் பகுதியில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல்.	24.96
		49.92

அலுவலக குறிப்பு:

மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 1305 / 2022 / இ1)

தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது

தீர்மானம் : 99 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் 2022-23–ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு 27.05.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

வேலையின் பெயர்	மதிப்பீடு ரூ.
வெள்ளகோவில் நகராட்சி அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுதல்.	10,00,000

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்தப்புள்ளி சதவீதம்
1)	எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர்	4.91% அதிகமாக
2)	ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர்,	5.45% அதிகமாக

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த **எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர்,** மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தபுள்ளி விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி, ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 1463 /2021 / இ1, நாள். 27.05.2022–ன் மூலம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை விட **4.91%** கூடுதலாக கொடுத்துள்ள விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், (விலைக்குறைப்பு கடிதத்தின்படி தெரிவித்துள்ள) 4.91% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண். 1463 / 2021 / இ1)

தீர்மானம் – ஏற்கப்பட்டது

தீர்மானம் : 100 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் பொது நிதித் திட்டம் 2022-23-ன் கீழ் கீழ்காணும் பணிக்கு 27.05.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

வேலையின் பெயர்	மதிப்பீடு ரூ.
வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட மூலனூர் ரோடு மணிவேல் தியேட்டர் எதிரில் வடிகால் அமைத்தல்.	5,00,000

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்தப்புள்ளி சதவீதம்
1	எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர்,	4.96 % மதிப்பீட்டை விட அதிகமாக
2	ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர்,	5.79 % மதிப்பீட்டை விட அதிகமாக

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த **எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர்** மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தபுள்ளி விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி, ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 1048 / 2022 / இ1, நாள். 27.05.2022–ன் மூலம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை விட **4.74%** கூடுதலாக கொடுத்துள்ள விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர் (விலைக்குறைப்பு கடிதத்தின்படி தெரிவித்துள்ள) 4.74% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
(கோப்பு எண். 1048 / 2022 / இ1)

தீர்மானம் – ஏற்கப்பட்டது

தீர்மானம் : 101 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் 2022-23–ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு 27.05.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

வேலையின் பெயர்	மதிப்பீடு ரூ.
வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உயர்மின்கோபுர விளக்குகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.	2,20,000/-

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்தப்புள்ளி சதவீதம்
1)	செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்	0.28% குறைவாக
2)	எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர்,	1.06% அதிகமாக

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், ஒப்பந்த புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், 0.28% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
(கோப்பு எண். 1382 / 2022 / இ1)

தீர்மானம் – ஏற்கப்பட்டது

தீர்மானம் : 102 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் பொது நிதித் திட்டம் 2022-23-ன் கீழ் கீழ்காணும் பணிக்கு 27.05.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

வேலையின் பெயர்	மதிப்பீடு ரூ.
வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட சொரியங்கிணத்துப்பாளையம் ஆதிதிராவிடர் காலனி மற்றும் நாச்சிபாளையம் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல்.	6,50,000

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்தப்புள்ளி சதவீதம்
1	செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்,	4.97 % மதிப்பீட்டை விட அதிகமாக
2	எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர்,	5.92 % மதிப்பீட்டை விட அதிகமாக

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த **செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்** மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தபுள்ளி விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி, ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1376 / 2022 / இ1, நாள். 27.05.2022–ன் மூலம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை விட **4.46%** கூடுதலாக கொடுத்துள்ள விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் (விலைக்குறைப்பு கடிதத்தின்படி தெரிவித்துள்ள) 4.46% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
(கோப்பு எண். 1376 / 2022 / இ1)

தீர்மானம் – ஏற்கப்பட்டது

தீர்மானம் : 103 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் பொது நிதித் திட்டம் 2022-23-ன் கீழ் கீழ்காணும் பணிக்கு 27.05.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

வேலையின் பெயர்	மதிப்பீடு ரூ.
வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட உப்புப்பாளையம் கிழக்கு பகுதியில் ஆழ்குழாய் கிணற்றில் மின்மோட்டார் அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல்.	3,00,000

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்தப்புள்ளி சதவீதம்
1	செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்,	4.81% மதிப்பீட்டை விட அதிகமாக
2	எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர்,	5.65 % மதிப்பீட்டை விட அதிகமாக

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த **செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்** மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தபுள்ளி விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி, ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1382 / 2022 / இ1, நாள். 27.05.2022–ன் மூலம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை விட **4.71%** கூடுதலாக கொடுத்துள்ள விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் (விலைக்குறைப்பு கடிதத்தின்படி தெரிவித்துள்ள) **4.71%** மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண். 1382 / 2022 / இ1)

தீர்மானம் – ஏற்கப்பட்டது

தீர்மானம் : 104 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் பொது நிதித் திட்டம் 2022-23-ன் கீழ் கீழ்காணும் பணிக்கு 27.05.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

வேலையின் பெயர்	மதிப்பீடு ரூ.
வெள்ளகோவில் நகராட்சிக்குப்பட்ட மு.பழனிச்சாமி நகர் முதல் வீதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல்.	36,000

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்தப்புள்ளி சதவீதம்
1	செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்,	4.83% மதிப்பீட்டை விட அதிகமாக
2	எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர்,	6.34 % மதிப்பீட்டை விட அதிகமாக

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த **செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்** மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தபுள்ளி விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி, ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1242 / 2022 / இ1, நாள். 27.05.2022–ன் மூலம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை விட **4.78%** கூடுதலாக கொடுத்துள்ள விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் (விலைக்குறைப்பு கடிதத்தின்படி தெரிவித்துள்ள) **4.78%** மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண். 1242 / 2022 / இ1)

தீர்மானம் – ஏற்கப்பட்டது

தீர்மானம் : 105 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் பொது நிதித் திட்டம் 2022-23-ன் கீழ் கீழ்காணும் பணிக்கு 27.05.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

வேலையின் பெயர்	மதிப்பீடு ரூ.
வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் நகர் பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் மேடை அமைத்தல்.	75,000

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்தப்புள்ளி சதவீதம்
1	செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்,	4.93% மதிப்பீட்டை விட அதிகமாக
2	எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர்,	6.94 % மதிப்பீட்டை விட அதிகமாக

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த **செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்** மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தபுள்ளி விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி, ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.915 / 2022 / இ1, நாள். 27.05.2022–ன் மூலம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை விட **4.84%** கூடுதலாக கொடுத்துள்ள விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் (விலைக்குறைப்பு கடிதத்தின்படி தெரிவித்துள்ள) **4.84%** மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண். 915 / 2022 / இ1)

தீர்மானம் – ஏற்கப்பட்டது

தீர்மானம் : 106 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் பொது நிதித் திட்டம் 2022-23-ன் கீழ் கீழ்காணும் பணிக்கு 27.05.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

வேலையின் பெயர்	மதிப்பீடு ரூ.
வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்	7,00,000

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்தப்புள்ளி சதவீதம்
1	செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்,	4.82% மதிப்பீட்டை விட அதிகமாக
2	எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர்,	5.58 % மதிப்பீட்டை விட அதிகமாக

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த **செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்** மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தபுள்ளி விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி, ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1381 / 2022 / இ1, நாள். 27.05.2022–ன் மூலம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை விட **4.39%** கூடுதலாக கொடுத்துள்ள விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் (விலைக்குறைப்பு கடிதத்தின்படி தெரிவித்துள்ள) **4.39%** மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண். 1381 / 2022 / இ1)

தீர்மானம் – ஏற்கப்பட்டது

தீர்மானம் : 107 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் பொது நிதித் திட்டம் 2022-23-ன் கீழ் கீழ்காணும் பணிக்கு 27.05.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

வேலையின் பெயர்	மதிப்பீடு ரூ.
வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தண்ணீர்தொட்டி மேடை மற்றும் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துல்	8,10,000

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்தப்புள்ளி சதவீதம்
1	செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்,	4.88% மதிப்பீட்டை விட அதிகமாக
2	எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர்,	5.77 % மதிப்பீட்டை விட அதிகமாக

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த **செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்** மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தபுள்ளி விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி, ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1377 / 2022 / இ1, நாள். 27.05.2022–ன் மூலம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை விட **4.35%** கூடுதலாக கொடுத்துள்ள விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் (விலைக்குறைப்பு கடிதத்தின்படி தெரிவித்துள்ள) **4.35%** மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண். 1377 / 2022 / இ1)

தீர்மானம் – ஏற்கப்பட்டது

தீர்மானம் : 108 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் திட்ட பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு மற்றும் திட்ட அறிக்கை தயார் செய்து வழங்க திட்ட ஆலோசகரை நியமனம் செய்ய ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் வெளியிட்டமைக்கு பட்டியல் Ravi Publicity Service,(பட்டியல் எண்.000113 / 31.05.2022) நிறுவனத்திடமிருந்து ரூ.2,268/–க்கு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1316 / 2022 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 109 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2022-23–ன் கீழ் பணிகள் மேற்கொள்ள ரூ.29.96 இலட்சத்திற்கு குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலக கடித ந.க.எண்.8880/2022/P2, நாள்.22.04.2022–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 2022-23 திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.1148 / 2021 / இ1)

தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது

தீர்மானம் : 110 / 2022

FORMAT FOR COUNCIL RESOLUTION

Resolved that the Municipal Commissioner, Vellakovil Municipality is authorised to borrow the loan amount of Rs.1780.00 lakhs at the flexible interest rate fixed by TUFIDCO Board /

Government under "Special Road Programme" Funding Scheme to implement the " Road works " at an estimated cost of Rs. 2081.09 lakhs" as per the terms and conditions prescribed by TUFIDCO.

(Rs. in lakhs)

Name of the Project	Project Cost	TUFIDCO's LOAN under SRP
Providing BT Surface @ Cheran Nagar & Pachagoundanvalasu North, Ganapathipalayam South, Erode Road(New Bus Stand Opposite) & Kumaravalasu Road in Vellakovil Municipality	200.00	1780.00
Providing BT Surface @ Kadaiyuranvalasu, Ariyandivalasu, LKC Nagar Cross Street & TC Road Cross Street in Vellakovil Municipality	200.00	
Restroration of BT Surface @ Erode Road South Cross Street, Nachipalayam to Ganapathipalayam Road, Soriyankinathupalayam to Compost Yard & Mulanur Road Cross Street in Vellakovil Municipality	200.00	
Restroration of BT Surface @ TC Road Cross Street, DR Nagar, Ganapathipalayam to Pothikkadu, Kamarajapuram Cross Street & Semmandampalayam to Mulanur Road in Vellakovil Municipality	200.00	
Restroration of BT Surface @ Uppupalayam Cross Street, Dharapuram Road Cross Street, Velagoundanpalayam Upto Canel Road, Seerangarayagoundanvalasu Road & VPMS Nagar Cross Street in Vellakovil Municipality	200.00	
Restroration of BT Surface @ Anna Nagar Cross Street, Natesan Nagar, Bharathiyar Street, Alagapuri Nagar, Velagoundanpalayam Cross Street, Vaiyapuri Nagar Cross Street & Kumaravalasu Road in Vellakovil Municipality	200.00	
Restroration of BT Surface @ Semmandapalayam Cross Street, Vettukadu, Patchagoundanvalasu Cross Street, Subramaniyagoundanvalasu, Nachipalayam Cross Street & Uppupalayam Road in Vellakovil Municipality	100.00	
Providing BT Surface @ Thannerpanthal East, Patchagoundanvalasu East & West Road & Sengalipalayam Road & Restoration of BT Surface @ Erode Road to Kumaravalasu Road, Erode Road Cross Street & Muthukumar Nagar Cross Street in Vellakovil Municipality	106.50	
Providing BT Surface @ Orampupalayam Road, Orampupalayam to Nachipalayam Road & Nachipalayam, Restroation of BT Surface @ Patchagoundanvalasu, Rajiv Nagar, Thiruvalluvar Nagar Cross Street, Katcherivalasu & Kurukkupalayam Road in Vellakovil Municipality	200.00	
Providing BT Surface @ Mulanur Road Cross Street, Velagoundanpalayam to Veerasolapuram Road, Uppupalayam Road, Uppupalayam East Road Cross Street, Uppupalayam West Cross Street, Kallankattuvalasu, Kallankattuvalasu Colony & Thirumangalam Road in Vellakovil Municipality	200.00	
Providing BT Surface @ Mulanur Road to Subramaniyagoundanvalasu Road, Pandian Nagar, Semmandampalayam Road & Restoration of BT Surface @ Pandian Nagar, Seerangarayagoundanvalasu, TC Road North Cross Street(Municipal office West Roads) & Indra Nagar in Vellakovil Municipality	200.00	
Providing Cement Concrete Road @ Sandy, Soriyankinathupalayam Compost Yard, Erode Road Cross Street & Kamarajapuram in Vellakovil Municipality	74.59	
Total	**2081.09**	**1780.00**

1. The Municipal Commissioner, Vellakovil Municipality be and hereby authorised to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formalities including affixing the Common seal of the Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of the Vellakovil Municipaltiy.

2. Resolved that the ULB account on the revenue collection such as property tax, professional tax and other revenue collections shall be escrowed in favour of TUFIDCO. This account will be in existence till the time of clearing the loan and other dues under this project to TUFIDCO.
3. Resolved that the Municipal Commissioner be and hereby authorized to make necessary budgetary provisions in the annual budget for the repayment of principal, interest and other money due for the loan availed for the project proposal to TUFIDCO.
4. Resolved to agree, to adjust by the Government of Tamil Nadu from funds receivable for Vellakovil Municipality such as Devolution grant payment under State Finance Commission recommendation, other grants, share on tax and stamp duties due from the State Government, in the event of default in repayment of principal, interest and other money due to TUFIDCO in respect of loans availed for these projects.

தீர்மானம் – பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது

தீர்மானம் : 111 / 2022

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட தீத்தாம்பாளையம் பகுதியில் அமைந்துள்ள சுகாதார வளாகத்தின் செப்டிக்டேங் நிரம்பி தண்ணீர் வெளியேறி அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. மேலும் அக்கழிப்பிடத்தை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி கழிப்பிடத்தின் செப்டிக்டேங்கை பொதுசுகாதார நலன் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி தனியார் வாகனம் மூலம் உடன் சுத்தம் செய்யவும் மேற்படி செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ. 12,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1514/2022/எச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 112 / 2022

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வீரக்குமார் நகர் பகுதியில் அமைந்துள்ள சுகாதார வளாகத்தின் செப்டிக்டேங் நிரம்பி தண்ணீர் வெளியேறி அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. மேலும் அக்கழிப்பிடத்தை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி கழிப்பிடத்தின் செப்டிக்டேங்கை பொதுசுகாதார நலன் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி தனியார் வாகனம் மூலம் உடன் சுத்தம் செய்யவும் மேற்படி செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ. 10,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1551/2022/எச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 113 / 2022

இந்நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார வாகனம் எண். **TN 42 T 8915** க்கு தகுதி சான்று 11.07.2022 தேதியுடன் முடிவடைகிறது. எனவே மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெற வண்டியில் உள்ள பழுதுகள் நீக்கம் செய்து பெயிண்டிங் வேலைகள் மேற்கொள்ளும் பணிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 1,45,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் விலைப்புள்ளி பெற்று அவசர அவசியம் கருதி பணிமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1869/2022/எச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 114 / 2022

இந்நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார வாகனம் எண். **TN 42 T 8912** க்கு தகுதி சான்று 11.07.2022 தேதியுடன் முடிவடைகிறது. எனவே மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெற வண்டியில் உள்ள பழுதுகள் நீக்கம் செய்து பெயிண்டிங் வேலைகள் மேற்கொள்ளும் பணிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் விலைப்புள்ளி பெற்று அவசர அவசியம் கருதி பணிமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1876/2022/எச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 115 / 2022

வெள்ளகோவில் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் JCB வாகனம் (TN 42 V 6546) பழுதுகள் ஏற்பட்டுள்ள நிலையில் மேற்படி வாகனத்தின் பழுதுகள் சரி செய்யவும் மேற்படி வாகனத்தின் டயர்கள் (பெரியது) பொருத்தி நான்கு ஆண்டுகளுக்கு மேலான நிலையில் தற்போது தேய்ந்த நிலையில் உள்ளதால் புதிய டயர்கள் கொள்முதல் செய்ய நகராட்சி துப்புரவு ஆய்வாளர் கோரியுள்ளார். அதன்படி இதற்கான உத்தேச செலவினம் பழுதுகள் சரி செய்ய ரூ. 1,20,000/- மற்றும் புதிய டயர்கள் வாங்க ரூ. 64,500 /- மொத்தம் ரூ. 1,85,000 /- ஆகும். மேற்படி பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி பணிமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1163/2022/எச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 116 / 2022

வெள்ளகோவில் நகராட்சி பகுதியில் பொதுசுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் பொது மக்களுக்கும், குழந்தைகளுக்கும் அச்சம் உண்டாக்கும் வகையில் தெருநாய்கள் வீதிகளில் சுற்றித்திரிவதாக பொது மக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே தற்போது நகராட்சி பகுதியில் உள்ள வீதிகளில் சுற்றித்திரியும் நாய்களுக்கு (கணக்கெடுப்பின்படி 365) விலங்குகள் நலவாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்கடி தடுப்பூசி செலுத்தும் பணி மேற்கொள்ளவும், விலங்குகள் கட்டுப்பாடு ஏபிசி திட்டத்தின்படி (அரசாணை எண்.181, நாள். 05.04.2013) நாய்ஒன்றுக்கு ரூ. 700/- வீதம் 365 நாய்களுக்கு ரூ.2,55,500/- செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1515/2022/எச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 117 / 2022

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி அலுவலக பொதுப்பிரிவில் கணினிகளை இயக்க 3 நபர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் ஒப்பந்ததாரருக்கு 01.05.2022 முதல் ஒரு மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்து வழங்கிய வேலை உத்தரவு 31.05.2022 –ம் தேதியுடன் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் தற்போதைய ஒப்பந்ததாரரான M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஊதியம் ஒரு நாள் ஒன்றுக்கு ரூ.595/–ஐ (ஆயுள் காப்பீடு தொகை மற்றும் EPF 13.61% உட்பட) ஏற்று இந்த நிறுவனத்தார் பணிகளை செய்து வருவதாலும், நிர்வாக நலன் கருதி துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்தின் வெளிக்கொணர்வு மூலம் மூன்று தட்டச்சு பணியாளர்களை 01.06.2022 முதல் 30.06.2022 வரை நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பு வழங்கவும், மேலும் 01.07.2022 முதல் 31.07.2022 வரை மேலும் ஒரு மாதம்

வெளிக்கொணர்வு மூலம் தட்டச்சு பணியாளர்களை துரை அன்கோ நிறுவனத்தின் மூலம் நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

இந்நகராட்சிக்கு தட்டச்சர்கள் பணிநியமனம் இல்லாததால், அவசர அவசியத்தினை முன்னிட்டு, 3 வெளிக்கொணர்வு பணியாளர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு 01.06.2022 முதல் 30.06.2022 வரை நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.07.2022 முதல் 31.07.2022 வரை நீட்டிப்பு செய்யலாம்.

(கோப்பு எண். 631 / 2018 / எச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 118 / 2022

வெள்ளகோவில் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் துப்புரவு பணி செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி எண். K.Dis.No. 28369 / J3, நாள். 04.12.2018 அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 221 ஆகும். ஆனால் தற்பொழுது 18 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். குறைவான துப்புரவு பணியாளர்களே இருப்பதால் துப்புரவு பணி பாதிக்கப்படாமல் இருக்க இந்நகர்மன்ற தீர்மான எண். 56/2022, நாள். 10.08.2022–ன் படி 117 பேர் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் தனியார் மூலம் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 535 /- என்ற தினக்கூலி அடிப்படையில் இந்நகராட்சியில் 21 வார்டுகளிலும் துப்புரவு பணி செய்து பணி உத்தரவு வழங்கப்பட்ட காலமானது 31.05.2022-ம் தேதியுடன் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திடமிருந்து 19.05.2021–ம் தேதிய கடிதத்தில் இப்பணி உத்திரவு ஒப்பந்த காலத்தை மேலும் ஓராண்டு காலம் நீடிப்பு செய்து தரவும் தற்பொழுது திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ந.க.எண். 5453 / 2019 / உ3, நாள். 11.08.2020-ன்படி (2020-2021) ஆம் நிதியாண்டுக்கான தினக்கூலி அடிப்படையில் கணக்கிட்டு ஊதியம் வழங்கவும் கோரி விண்ணப்பித்துள்ளார். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் K.Dis.No. 28369/J3, நாள். 04.12.2018-ன்கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின் அடிப்படையில் தேசிய தாழ்த்தப்பட்டோர் நலவாரியத்தால் அவ்வப்பொழுது நடத்தும் ஆய்வு கூட்டத்தில் தொடர்ந்து வலியுறுத்தப்படுவதாலும் அந்தந்த நிதியாண்டிற்கு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்பொழுது நிர்ணயம் செய்யும் தினக்கூலி தொகையுடன் EPF, ESI, சீருடை, பாதுகாப்பு உபகரணம், ஆயுள் காப்பீடு மற்றும் நிர்வாக கட்டணமும் கணக்கிட்டு ஊதியத்துடன் வழங்கவும், வெள்ளகோவில் நகராட்சியில் தற்பொழுது 18 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே உள்ளதால், இந்நகராட்சிக்குத் தேவையான துப்புரவு பணியாளர்களின் அளவுகோலில் (221 நபர்கள்) 10% குறைவாகவே உள்ளனர். நகராட்சியிலிருந்து பணியாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்ட ஊதியமானது நகராட்சி வருவாயில் 49 % குறைவாகவே உள்ளது. எனவே காலியாக உள்ள துப்புரவு பணியாளர்கள் பணியிடம் போதுமானதாக இல்லாததாலும், அத்தியாவசியப் பணியான துப்புரவு பணி பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தாலும், ஒப்பந்ததாரர் திரு. M/s. துரை அன்கோ அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் தினக்கூலி நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 535 /–ஐ ஏற்ற தொடர்ந்து இந்த நிறுவனத்தார் பணிகளை செய்து வருவதாலும், நகரின் தூய்மைபணி பாதிப்படையாமல் இருக்கவும் மற்றும் நிர்வாக நலன் கருதி துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்தின் வெளிக்கொணர்வு மூலம் 117 தூய்மை பணியாளர்களை 01.06.2022 முதல் 30.06.2022 வரை நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பு வழங்கவும், மேலும் 01.07.2022 முதல் 31.07.2022 வரை மேலும் ஒரு மாதம் வெளிக்கொணர்வு மூலம் தூய்மை பணியாளர்களை துரை அன்கோ நிறுவனத்தின் மூலம் நீட்டிப்பு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

இந்நகரின் தூய்மை பணி பாதிக்கப்படாமல் இருக்கும் நோக்கில் அவசர அவசியத்தினை முன்னிட்டு, 117 வெளிக்கொணர்வு பணியாளர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு 01.06.2022 முதல் 30.06.2022 வரை நீட்டித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும் 01.07.2022 முதல் 31.07.2022 வரை நீட்டிப்பு செய்யலாம்.

(கோப்பு எண். 469 / 2020 / எச்1).

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 119 / 2022

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் கனரக வாகனங்களை இயக்க 4 நபர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் ஒப்பந்ததாரருக்கு 01.05.2022 கால நீட்டிப்பு செய்து வழங்கிய வேலை உத்தரவு 31.05.2022 –ம் தேதியுடன் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் தற்போதைய ஒப்பந்ததாரரான M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஊதியம் ஒரு நாள் ஒன்றுக்கு ரூ.595/–ஐ (சீருடை, பாதுகாப்பு உபகரணங்கள், ஆயுள் காப்பீடு தொகை மற்றும் EPF 13.61% உட்பட) ஏற்று தொடர்ந்து இந்த நிறுவனத்தார் பணிகளை செய்து வருவதாலும், நகரின் தூய்மைபணி பாதிப்படையாமல் இருக்கவும் மற்றும் நிர்வாக நலன் கருதி துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்தின் வெளிக்கொணர்வு மூலம் நான்கு ஓட்டுநர்களை 01.06.2022 முதல் 30.06.2022 வரை நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பு வழங்கவும், மேலும் 01.07.2022 முதல் 31.07.2022 வரை மேலும் ஒரு மாதம் வெளிக்கொணர்வு மூலம் ஓட்டுநர்களை துரை அன்கோ நிறுவனத்தின் மூலம் நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு போதுமான ஓட்டுநர் இல்லாத காரணத்தின் அவசர அவசியம் கருதி நகரில் குப்பைகள் தேங்காவண்ணம் சுகாதாரமாக வைக்கவும், வெளிக்கொணர்வு மூலம் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு 01.06.2022 முதல் 30.06.2022 வரை நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும் 01.07.2022 முதல் 31.07.2022 வரை நீட்டிப்பு செய்யலாம்.

(கோப்பு எண். 607 / 2018 / எச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 120 / 2022

வெள்ளகோவில் நகராட்சி 2022-23-ம் ஆண்டு முதல் சொத்துவரி சீராய்வு செய்வது தொடர்பான அறிவிப்பினை மாவட்ட அளவிலான மூன்று தினசரி நாளிதழ்களில் கீழ்கண்ட விபரப்படி 13.04.2022 அன்று விளம்பரம் செய்தமைக்கு வரபெற்ற பட்டியல் தொகை பின்வருமாறு:

வரிசை எண்	விபரம்	தொகை ரூ
01	தினந்தந்தி நாளிதழ்	14364
02	AFTER NOON	21000
03	தினகரன்	15939

மேற்படி வரப்பெற்ற பட்டியல் தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண் :1222/2022/அ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 121 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் பேருந்து நிலைய காவலராக பணிபுரிந்து வரும் திரு. செ. அருண்குமார் என்பவர், இந்நகராட்சியில் பணியேற்பாட்டின் அடிப்படையில் புள்ளி விபர குறிப்பாளர் பணியிடத்தில் பணிபுரிந்து வருவதாகவும், மேற்படி புள்ளி விபர குறிப்பாளர் பணியிடத்திற்குரிய கல்வித் தகுதிகள் பெற்றிருப்பதாலும், 17 ஆண்டுகளுக்கு மேலாக இந்நகராட்சியில் கணினி தொடர்பான பணிகளையே தொடர்ந்து கவனித்து வருவதாலும், தனக்கு முன்னுரிமை அளித்து நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யும் புள்ளி விபரக் குறிப்பாளர் பணியிடத்திற்கான விதிகளை தளர்வு செய்து பொதுப்பிரிவில் பணிபுரிந்து வரும் தன்னை, நகராட்சியின் தகவல் தொழில்நுட்ப பிரிவில் உள்ள புள்ளி விபர குறிப்பாளர் பணியிடத்தில் பணி நியமனம் செய்து உத்தரவு வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார்.

மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 162, நாள். 15.11.2016–ல் தெரிவித்துள்ளவாறு புள்ளி விபர குறிப்பாளர் பணியிடத்திற்கான கல்வித்தகுதிகளாக குறிப்பிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புடன் கூடிய தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனத்தில் Diploma in Computer Application சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் Account

test for Subordiate Officers (Part-I) மற்றும் Tamilnadu Government Office Manual Test ஆகிய துறைத் தேர்வுகளை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அன்னார் மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகமான பாரதியார் பல்கலைக்கழகத்தில் B.Sc. Computer science, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுகலை தேர்ச்சியும், அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனத்தில் Post Gradutate of Diploma in Computer Application தேர்ச்சியும் பெற்றுள்ளார். மேலும் துறைத் தேர்வுகளையும் தேர்ச்சி பெற்றுள்ளார். எனவே அன்னாரின் விண்ணப்பத்தின்பேரில் இந்நகராட்சியில் புள்ளி விபர குறிப்பாளர் பணியிடத்திற்கு அன்னாரை நியமனம் செய்வது குறித்து மன்றத்தின் அனுமதிக்கும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மேற்படி அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1833 / 2022 / சி1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 122 / 2022

திருப்பூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய பொது மேலாளர் அவர்களின் கடிதத்தில், 2018-19–ம் நிதியாண்டின் பால்வள மானியக் கோரிக்கைத் தொடர் கூட்டத்தில், விதி எண். 110–ன்கீழ் தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் பொதுமக்கள் அதிகமாக நடமாட்டம் உள்ள இடங்களில் ஆவின் பாலகம் அமைக்கும் திட்டத்தினை அறிவித்துள்ளதன்படி, வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய வளாக முன்புற பகுதியில் 15 x 15 என்ற அளவில் 225 சதுர அடி அளவில் புதிய நவீன ஆவின் பாலகம் அமைக்க அனுமதி கோரப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பேருந்து நிலைய வளாக முன்புற பகுதியில் அம்மா உணவகம் அருகில் (முன்புறத்தில்) 15 x 15 என்ற அளவில் புதிய நவீன ஆவின் பாலகம் பொதுமக்களுக்கு இடையூறுன்றி வைக்க மன்றத்தின் அனுமதிக்கும், மேற்படி 225 சதுர அடிக்கு நகராட்சிப் பொறியாளர் அவர்களின் கணக்கீட்டுத்தாளின்படி நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகையாக ரூ. 650 /- வசூலிக்கவும், மேலும் மேற்படி ஆவின் பாலகம் அமைக்க அனுமதி வேண்டியும், வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யக்கோரி நகர்மன்றத் தீர்மானம் எண். 287 / 2021, நாள். 29.09.2021–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கருத்துரு அனுப்பப்பட்டதில், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 8607 / 2022 / ஆர்–2, நாள். 26.04.2022–ல் மேற்படி இடத்தில் பாலகம் அமைக்க தற்போதைய சந்தை மதிப்புத் தொகைக்கு உரிய முறையில் வாடகை கணக்கிட்டு நகர்மன்றத் தீர்மானம் நகலுடன் அனுப்பி வைக்கத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சி வருவாய் ஆய்வாளர் (பொ) அவர்களின் அறிக்கையின்படி மேற்படி 15 x 15 = 225 சதுர அடிக்கு மாத வாடகையாக தற்போதைய சந்தை மதிப்புத் தொகை ரூ. 1500 /- என நிர்ணயம் செய்யலாம் என அறிக்கை சமர்ப்பித்துள்ளார். எனவே மேற்படி சந்தை மதிப்புத் தொகை நிர்ணயம் செய்யவும், கருத்துரு மீள சமர்ப்பிக்கவும் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 925 / 2021 / அ3)

தீர்மானம் – நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு மேலனுப்ப அனுமதிக்கப்படுகிறது

தீர்மானம் : 123 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 20789/2021/UPAI, நாள். 16.06.2022–ன்படி, தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (சாலையோர வியாபாரத்தினை ஒழுங்குமுறைபடுத்துதல் மற்றும் வாழ்வாதாரத்தை பாதுகாத்தல்) திட்டம் மற்றும் விதிகள், 2015-ன் கீழ் (மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள். 07.04.2022) நடவடிக்கைகளான, தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட, நடப்பாண்டில் சர்வே செய்தல், அடையாள அட்டை வழங்குதல், வியாபாரச்சான்று, நகர வியாபார திட்டம் மற்றும் விரிவான உள்கட்டமைப்பு திட்டம் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

சாலையோர வியாபாரிகளுக்கான புதிய கணக்கெடுப்பு நடத்தி அடையாள அட்டை வழங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/-க்கு இணையவழி ஒப்பந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(கோப்பு எண். 790 / 2014 / எப்1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 124 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் மின்மோட்டார் இயக்குதல், ஈப்பு வாகன ஓட்டுநர், குடிநீர் குழாய் இயக்குபவர் போன்ற பணிகள் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட வருகிறது. தற்பொழுது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் அலுவலக கடிதம் ந.க.எண்.21187 / 2021 / EA2, நாள்.02.10.2021–மூலம் புதியதாக பணியாளர்கள் நியமிப்பது குறித்து அளவுகோல் வழிமுறைகள் வழங்கப்பட்டதின் அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்ய திட்டக் கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி திட்டம் அனுமதி பெறப்பட்டு செயல்படுத்துப்படும் வரை ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் சப்ளை செய்யும் ஒப்பந்ததாரரை கால நீட்டிப்பு செய்து ஏற்கனவே வழங்கிய ஒப்பந்த விகிதத்தில் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. 01.05.2022 முதல் 31.05.2022 மற்றும் 01.06.2022 முதல் 30.06.2022 வரை காலநீட்டிப்பு செய்து கொண்டமைக்கு பின்னேற்பும் 01.07.2022 முதல் 31.07.2022 வரை நீட்டித்து வைத்துக்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2021 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 125 / 2022

வெள்ளகோவில் நகராட்சி அலுவலகம் திருச்சி கோவை ரோட்டில் செயல்பட்டு வருகிறது. மேற்படி வளாகத்தில் ஆணையாளர் மற்றும் நகர்மன்றத் தலைவர் அறை, நகர்மன்ற கூட்ட அறை, பொறியியல் பிரிவு, பொது சுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு, வருவாய் பிரிவு அறை, அலுவலக பிரிவு, கணினி பிரிவு மற்றும் ஆதார் மைய அறை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மேற்படி வளாகத்தில் உள்ள கட்டிடங்களுக்கு வர்ணம் பூச்சு செய்து சுமார் 7 வருட காலங்களுக்கு மேல் ஆகிவிட்டதால், புதியதாக வர்ண பூச்சு பூச வேண்டியுள்ளது. மேலும் அலுவலகத்தில் மண்நடைபாதையில் பேவர் பிளாக் அமைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.10,00,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1919 / 2022 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 126 / 2022

வெள்ளகோவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் இருந்து மின்மோட்டார் மூலம் சின்டெக்ஸ் தொட்டியில் நிரப்பப்பட்டு சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக மு.பழனிச்சாமி நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மின்மோட்டாரில் ஏற்பட்ட பழுதின் காரணமாக அதன் உதிரி பாகங்கள் மிகவும் உபயோகமற்ற நிலையில் பழுதடைந்துவிட்டது. இதனால் மேற்படி பணியானது குடிநீர் பணியாக உள்ளதால் அவசர அவசியம் கருதி மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.65,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1773 / 2022 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 127 / 2022

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வளாகம் மற்றும் எல்.கே.சி நகர் பகுதியில் உள்ள பொது சுகாதார பிரிவிற்கு சொந்தமான நுண்உர மையத்தில் உள்ள குப்பை அரைக்கும் இயந்திரம் பழுதாகி இயக்க முடியாத நிலையில் உள்ளதால் குப்பைகளை அரைக்க இயலாத நிலையில் உள்ளது. மேற்படி பழுதினை சரிசெய்து தர துப்புரவு மேற்பார்வையாளர் கோரிக்கை வைத்துள்ளார். மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.3,00,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1619 / 2022 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 128 / 2022

வெள்ளகோவில் நகராட்சிக்கு உட்பட்ட வீரக்குமார் கோவில் தெப்பக்குளம் பகுதியில் உள்ள பழுதான குடிநீர் மேல்நிலைத்தொட்டியை இடிக்கும்பொழுது வீரக்குமார் கோவில் கட்டண கழிப்பிடத்திற்கு பயன்படுத்தப்பட்டு வந்த மின்மோட்டார் மீது தவறுதலாக விழுந்துவிட்டது. இதனால் மின்மோட்டார் மிகவும் பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதால் கழிப்பிடத்திற்கு குடிநீர் விநியோகம் தடைபட்டுள்ளது. இதனால் கழிப்பிடத்தை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே புதிய மின்மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்ய வேண்டி உள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.75,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1931 / 2022 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 129 / 2022

வெள்ளகோவில் நகராட்சிக்கு உட்பட்ட வீரக்குமார் நகர் பகுதியில் சின்டெக்ஸ் தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் சின்டெக்ஸ் டேங்க் அளவு மற்றும் உயரம் குறைவாக உள்ளதால் குடிநீர் விநியோகம் சீரான வகையில் வழங்க இயலாமல் உள்ளது. எனவே இரும்பு ஸ்டேண்ட் அமைத்து மேல்நிலைத்தொட்டி மூலம் வீரக்குமார் நகர் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.1,42,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1930 / 2022 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 130 / 2022

வெள்ளகோவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டத்தொடர் அறை, பொறியியல் பிரிவு அறை, முதல் தளத்தில் உள்ள கூட்ட அரங்கு ஆகியவற்றில் உள்ள மின் விளக்குகள் மற்றும் பழுதான மின் விசிறிகள், புதுப்பை தலைமை நீரேற்று நீருந்து நிலையத்தில் பழுதான மின்விளக்குகள் மற்றும் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் ஞாயிறு தோறும் கூடும் சந்தை நடைபெற உள்ளதால் அப்பகுதிகளில் கூடுதலாக மின்விளக்குகள் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.98,000/– க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1919 / 2022 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 131 / 2022

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட இந்திரா நகர் மற்றும் கச்சேரிவலசு பகுதிகளில் மின்மோட்டார்கள் மூலம் சின்டெக்ஸ் டேங்க் வைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் 5 இடங்களில் உள்ள மின்மோட்டார் அறையின் கதவுகள் பழுதடைந்துள்ளதால் மின்மோட்டார் மற்றும் மின்இணைப்புகள் திறந்த வெளியில் உள்ளன. எனவே மேற்படி இடங்களில் உள்ள மின்மோட்டார் அறைகளுக்கு புதியதாக கதவுகள் அமைக்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.1,25,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.170 / 2022 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 132 / 2022

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட இந்திரா நகர், கச்சேரி வலசு, காந்தி நகர், மு.பழனிச்சாமி நகர், காமராஜபுரம், அண்ணாநகர், நடேசகவுண்டர்வீதி, பெரியார் வீதி, அம்மன்கோவில் வீதி, விறகுத்தோப்பு போன்ற சாலை குறுகலான பகுதிகளில் சாக்கடை சுத்தம் செய்தும் பொழுது அதன் கழிவுகளை நகராட்சி குப்பை வண்டிகள் மூலம் அப்புறப்படுத்த முடியவில்லை. இப்பகுதியில் குறுகிய சாலை மற்றும் வீடுகள் நெருக்கமாக உள்ளதாலும் லாரிகள் சென்று வர இயலாத நிலையில் உள்ளது. ஆகையால் சாக்கடை கழிவை அகற்ற தள்ளுவண்டி 10 எண்ணிக்கை வாங்க வேண்டியுள்ளது. மேற்படி தள்ளுவண்டிகளை வாங்க மன்றத்தின் அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,00,000/– மன்றத்தின் பார்வைக்கு.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1838 / 2022 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 133 / 2022

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் அமராவதி ஆறு திட்டம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் ஈரோடு ரோடு, சலவையாளர் காலனி மற்றும் மூலனூர் ரோடு நீருந்து நிலையம் ஆகிய இடங்களில் மின்மோட்டார் மூலம் ஹைபோகுளோரைடு திரவம் குடிநீரில் கலக்கப்பட்டு குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதிலுள்ள மின்மோட்டார்கள் பழுது ஏற்படும் பொழுது உடனுக்குடன் பழுதுகள் சரிசெய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்படி மின்மோட்டார்களை வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ள மதிப்பீடு ரூ.1,50,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 958 / 2022 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 134 / 2022

வெள்ளகோவில் நகராட்சி பதிவறை எழுத்தர் (பொ) கடிதத்தில் நகராட்சி பதிவறையில் கோப்புகள் மற்றும் பதிவேடுகள் வைக்க போதிய ரேக்குகள் (இரும்பு அலமாரிகள்) இல்லாததால் புதிதாக வாங்கிதருமாறு கோரியுள்ளார். எனவே மேற்படி கோப்புகள் மற்றும் பதிவேடுகள் பாதுகாப்பு கருதியும், அவசர அவசியம் கருதி இரும்பு அலமாரிகள் கொள்முதல் செய்யவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ. 2,50,000 /–க்கும் மேற்படி செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்: 1336/2022/அ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

தீர்மானம் : 135 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2021-22-ன் கீழ் கீழ்காணும் பணிக்கு 07.06.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

வேலையின் பெயர்	மதிப்பீடு ரூ.
வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட அகலரைப்பாளையம்புதூர் பகுதியில் சமுதாயக் கழிப்பிடம் அமைத்தல்	24,96,000

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்தப்புள்ளி சதவீதம்
1	ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர்,	5.51% மதிப்பீட்டை விட அதிகமாக
2	எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர்,	6.56 % மதிப்பீட்டை விட அதிகமாக

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த **ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர்** மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தபுள்ளி விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி, ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1305 / 2022 / இ1, நாள். 07.06.2022–ன் மூலம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை விட **4.84%** கூடுதலாக கொடுத்துள்ள விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர் (விலைக்குறைப்பு கடிதத்தின்படி தெரிவித்துள்ள) **4.84%** மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண். 1305 / 2022 / இ1)

தீர்மானம் – ஏற்கப்பட்டது

தீர்மானம் : 136 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2021-22-ன் கீழ் கீழ்காணும் பணிக்கு 27.05.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

வேலையின் பெயர்	மதிப்பீடு ரூ.
வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட செம்மாண்டம்பாளையம் பகுதியில் சமுதாயக் கழிப்பிடம் அமைத்தல்	24,96,000

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்தப்புள்ளி சதவீதம்
1	எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர்,	4.94% மதிப்பீட்டை விட அதிகமாக
2	ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர்,	6.01 % மதிப்பீட்டை விட அதிகமாக

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த **எஸ். சுப்பையா கன்ஸ்ட்ரக்சன்,** ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தபுள்ளி விதிகளின் படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி, ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1305 / 2022 / இ1, நாள். 27.05.2022–ன் மூலம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை விட **4.67%** கூடுதலாக கொடுத்துள்ள விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதை ஏற்று 02.06.2022 வேலை உத்தரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கு.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1305 / 2022 / இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. கனியரசி
நகர்மன்றத்தலைவர்
வெள்ளகோவில் நகராட்சி

/ உண்மை நகல் /

29/6/22

ஆணையாளர்
வெள்ளகோவில் நகராட்சி

29.6.22

அவசரக்கூட்டம்

வெள்ளகோவில் நகராட்சியின் அவசரக்கூட்டம் 2022-ம் ஆண்டு சுபகிருது வருடம் ஜுன் மாதம் **29.06.2022–ம் தேதி புதன்கிழமை காலை 12.00 மணிக்கு** நகர்மன்றத் தலைவர் தலைமையில் நடைபெற்று கீழ்காணும் பொருள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானம் : 137 / 2022

வெள்ளகோவில் நகராட்சியானது 1938–ம் ஆண்டில் ஊராட்சியாக உருவாக்கப்பட்டது. 04.12.1954–ன்படி இரண்டாம் நிலை பேரூராட்சியாகவும், 02.03.1963–ன்படி முதல்நிலை பேருராட்சியாகவும், 24.03.1982–ன்படி தேர்வுநிலை பேரூராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வந்தது. 01.10.2004–ல் மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும் 09.08.2010–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 54.87 சதுர கி.மீட்டர் ஆகும். மொத்தமுள்ள வார்டுகள் 21, 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 40359 ஆகும். தற்போதைய மக்கள் தொகை 55000 ஆகும்.

இந்நகராட்சி அலுவலகக் கட்டிடம் திருச்சி கோவை நெடுஞ்சாலையில் அமைந்து உள்ளது. நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர், மேல்தளம் மட்டுமே அமைக்கப்பட்டது. நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர் அதற்கான பணியிடங்கள் உருவாக்கப்பட்டது. ஆனால் அதற்கான இடவசதி இல்லை. தினசரி பல்வேறு பணிகளுக்காகவும் மற்றும் வரி செலுத்தவும் நகராட்சிக்கு ஏராளமான பொதுமக்கள் வந்து செல்கின்றனர். நகராட்சி அலுவலகத்தில் போதிய இடவசதி இல்லாத காரணத்தால் வாகனங்கள் நிறுத்த இட வசதி இல்லாமல், அலுவலகம் முன்பாக திருச்சி கோவை நெடுஞ்சாலையில் நிறுத்தப்படுகிறது. இதனால் போக்குவரத்து நெரிசலுடன், அடிக்கடி விபத்துக்களும் ஏற்படுகிறது. மேலும் அலுவலக வளாகத்திற்குள் குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைந்துள்ளதால், கூடுதலாக கட்டிடம் கட்ட இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே பெறுகி வரும் மக்கள் தொகை மற்றும் நகரின் வளர்ச்சிக் கேற்ப போதிய இடவசதியுடன் நகராட்சி அலுவலகம் அமைக்கப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே இதற்கு நகராட்சிக்குட்பட்ட உப்புப்பாளையம் சாலையில் 1 ஏக்கர் பரப்பளவில் நகராட்சிக்குச் சொந்தமான இடம் உள்ளதால், அவ்விடத்தில் இந்நகராட்சிக்கு புதியதாக அனைத்து வசதிகளுடனும் கூடிய புதிய அலுவலகக் கட்டிடம் ரூ. 3.50 கோடி மதிப்பீட்டில் அமைக்க மதிப்பீடு தயார் செய்து நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 801 / 2022 / இ1)

தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது

தீர்மானம் : 138 / 2022

வெள்ளகோவில் நகராட்சியில் வாரச்சந்தை வளாகத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் தினசரி மார்க்கெட் அமைக்கும் பணிக்கு தமிழக அரசாணை எண். 16, நாள். 20.01.2022 மூலம் ரூ. 381.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்று வெள்ளகோவில் நகராட்சி மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கொள்ளப்படும் பணிகள் விபரம்

வ.எண்.	பணி விபரம்	மதிப்பீடு
1	130 தினசரி கடைகள், நிர்வாக அலுவலகம், உணவகம், ATM மையம், வாகன நிறுத்துமிடம், காவலர் குடியிருப்பு மற்றும் வியாபாரிகள் தங்குமிடம்	ரூ. 381.00 இலட்சங்கள்

மேற்கண்ட பணி மேற்கொள்ளப்படும் பொழுது வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்ததில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கீழ்வரும் கூடுதல் பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள்.

கூடுதலாக தேவைப்படும் பணிகள்

வ.எண்.	பணி விபரம்	மதிப்பீடு
1	ஏற்கனவே 228 பேர்கள் வாரச்சந்தை கடைகள் வைத்துள்ளவர்களுக்கு கடைகள் ஒதுக்கீடு செய்திடும் வகையில் ஏற்கனவே ஒப்புதல்	ரூ. 138.50 இலட்சங்கள்

	அளிக்கப்பட்டுள்ள 130 கடைகள் நீங்கலாக கூடுதலாக 98 புதிய வாரச்சந்தை கடைகளும், மேலும் கான்கீரிட் கூரை மற்றும் ரோலிங் ஷட்டருடன் கூடிய 16 தினசரி கடைகள் மற்றும் 14 இறைச்சி கடைகளும் அமைத்திட அனுமதி வேண்டும்.	

எனவே, பொதுமக்கள் மற்றும் வாரச்சந்தை வியாபாரிகள் நலன்கருதி மேற்படி கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக கூடுதலாக அமைக்கப்பட வேண்டிய 98 வாரச்சந்தை கடைகள் மற்றும் பாதுகாப்பு வசதியுடன் கூடிய 30 தினசரி கடைகள் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ. 138.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 1119 / 2022 / இ1)

தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது

தீர்மானம் : 139 / 2022

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்காணும் விபரப்படி 2021-22–ம் ஆண்டு 15–வது நிதிக்குழு மானியத் திட்டத்தின்கீழ் கீழ்காணும் விபரப்படி புதியதாக தெருமின்விளக்குகள் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	தெருவிளக்குகள் விபரம்	எண்ணிக்கை
1	ஏற்கனவே உள்ள மின்கம்பத்தில் தெருவிளக்குகள் அமைத்தல்	23
2	ஏற்கனவே உள்ள மின்கம்பத்தில் மின்கம்பி அமைத்து தெருவிளக்குகள் அமைத்தல்	148
3	புதியதாக மின்கம்பம் மற்றும் மின்கம்பி அமைத்து தெருவிளக்குகள் அமைத்தல்	29

தற்சமயம் புதியதாக தெருமின்விளக்குகள் அமைத்துத்தர நகர்மன்றத் தலைவர், துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளதன்பேரில் கூடுதலாக கிழ்காணும் விபரப்படி தெருமின்விளக்குகள் அமைக்க மதிப்பீடு மற்றும் திட்டக்கருத்துரு ரூ.31.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	தெருவிளக்குகள் விபரம்	எண்ணிக்கை
1	ஏற்கனவே உள்ள மின்கம்பத்தில் தெருவிளக்குகள் அமைத்தல்	50
2	ஏற்கனவே உள்ள மின்கம்பத்தில் மின்கம்பி அமைத்து தெருவிளக்குகள் அமைத்தல்	100
3	புதியதாக மின்கம்பம் மற்றும் மின்கம்பி அமைத்து தெருவிளக்குகள் அமைத்தல்	50

மேற்படி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 1129 / 2022 / இ1)

தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது

தீர்மானம் : 140 / 2022

நகராட்சிக்குட்பட்ட கச்சேரிவலசு பகுதியில் அருள்பிரசாத் வீடருகில் உள்ள பொதுக்குழாய் மின்கம்பத்தின் அருகில் உள்ளதால், தண்ணீர் பிடிப்பதற்கு இடையூறாக உள்ளது. எனவே மேற்படி பொதுக்

குழாயை அருகிலுள்ள இடத்திற்கு மாற்றித் தரக் கோரி வரப்பெற்ற 5–வது நகர்மன்ற உறுப்பினரின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 170 / 2022 / இ1)

தீர்மானம் – மேற்படி இடையூறாக உள்ள பொது குழாயை அருகில் உள்ள இடத்திற்கு மாற்றியமைக்க அனுமதிக்கப்படுகிறது

(ஒப்பம்) மு. கனியரசி
நகர்மன்றத்தலைவர்
வெள்ளகோவில் நகராட்சி

/ உண்மை நகல் /

29/6/22

ஆணையாளர்
வெள்ளகோவில் நகராட்சி

29/6/22